# 07.010 தேனெய் புரிந்துழல் செஞ்சடை

**திருமுறை :** ஏழாம் திருமுறை
**தலம் :** கச்சி அனேகதங்காவதம் (காஞ்சிபுரம்)
**அருளியவர் :** சுந்தரர்
**பண் :** இந்தளம்
**நாடு :** தொண்டைநாடு

**திருச்சிற்றம்பலம்**

தேனெய் புரிந்துழல் செஞ்சடை யெம்பெரு
மானதி டந்திகழ் ஐங்கணையக்
கோனை யெரித்தெரி யாடி இடங்குல
வான திடங்குறை யாமறையாம்
மானை இடத்ததோர் கையனி டம்மத
மாறு படப்பொழி யும்மலைபோல்
யானை யுரித்த பிரான திடங்கலிக்
கச்சி அனேகதங் காவதமே. 1

கூறு நடைக்குழி கட்பகு வாயன
பேயுகந் தாடநின் றோரியிட
வேறு படக்குட கத்திலை யம்பல
வாணன்நின் றாடல் விரும்புமிடம்
ஏறு விடைக்கொடி யெம்பெரு மான்இமை
யோர்பெரு மான்உமை யாள்கணவன்
ஆறு சடைக்குடை அப்ப னிடங்கலிக்
கச்சி அனேகதங் காவதமே. 2

கொடிக ளிடைக்குயில் கூவுமி டம்மயி
லாலுமி டம்மழு வாளுடைய

கடிகொள் புனற்சடை கொண்ட நுதற்கறைக்
கண்டனி டம்பிறைத் துண்டமுடிச்
செடிகொள் வினைப்பகை தீருமி டந்திரு
வாகுமி டந்திரு மார்பகலத்
தடிக ளிடம்அழல் வண்ண னிடங்கலிக்
கச்சி அனேகதங் காவதமே. 3

**கொங்கு நுழைத்தன வண்டறை கொன்றையுங்**
**கங்கையுந் திங்களுஞ் சூடுசடை**
**மங்குல் நுழைமலை மங்கையை நங்கையைப்**
**பங்கினிற் றங்க உவந்தருள்செய்**
**சங்கு குழைச்செவி கொண்டரு வித்திரள்**
**பாய வியாத்தழல் போலுடைத்தம்**
**அங்கை மழுத்திகழ் கைய னிடங்கலிக்**
**கச்சி அனேகதங் காவதமே. 4**

பைத்த படத்தலை ஆடர வம்பயில்
கின்ற இடம்பயி லப்புகுவார்
சித்தம் ஒருநெறி வைத்த இடந்திகழ்
கின்ற இடந்திரு வானடிக்கே
வைத்த மனத்தவர் பத்தர் மனங்கொள
வைத்த இடம்மழு வாளுடைய
அத்தன் இடம்அழல் வண்ண னிடங்கலிக்
கச்சி அனேகதங் காவதமே. 5

**தண்ட முடைத்தரு மன்தமர் என்றம**
**ரைச்செயும் வன்துயர் தீர்க்குமிடம்**
**பிண்ட முடைப்பிற வித்தலை நின்று**
**நினைப்பவர் ஆக்கையை நீக்குமிடம்**
**கண்ட முடைக்கரு நஞ்சை நுகர்ந்த**
**பிரான திடங்கடல் ஏழுகடந்**

**தண்ட முடைப்பெரு மான திடங்கலிக்**
**கச்சி அனேகதங் காவதமே. 6**

கட்டு மயக்கம் அறுத்தவர் கைதொழு
தேத்து மிடங்கதி ரோன்ஒளியால்
விட்ட இடம்விடை யூர்தி யிடங்குயிற்
பேடைதன் சேவலோ டாடுமிடம்
மட்டு மயங்கி அவிழ்ந்த மலரொரு
மாதவி யோடு மணம்புணரும்
அட்ட புயங்கப் பிரான திடங்கலிக்
கச்சி அனேகதங் காவதமே. 7

**புல்லி இடந்தொழு துய்துமெ னாதவர்**
**தம்புர மூன்றும் பொடிப்படுத்த**
**வில்லி இடம்விர வாதுயிர் உண்ணும்வெங்**
**காலனைக் கால்கொடு வீந்தவியக்**
**கொல்லி இடங்குளிர் மாதவி மவ்வல்**
**குராவகு ளங்குருக் கத்திபுன்னை**
**அல்லி யிடைப்பெடை வண்டுறங் குங்கலிக்**
**கச்சி அனேகதங் காவதமே. 8**

சங்கை யவர்புணர் தற்கரி யான்றள
வேனகை யாள்தவி ராமிகுசீர்
மங்கை யவள்மகி ழச்சுடு காட்டிடை
நட்டம்நின் றாடிய சங்கரனெம்
அங்கையி னல்லனல் ஏந்து மவன்கனல்
சேரொளி யன்னதோர் பேரகலத்
தங்கை யவன்னுறை கின்ற இடங்கலிக்
கச்சி அனேகதங் காவதமே. 9

வீடு பெறப்பல ஊழிகள் நின்று
நினைக்கும் இடம்வினை தீருமிடம்
பீடு பெறப்பெரி யோர திடங்கொண்டு
மேவினர் தங்களைக் காக்குமிடம்
பாடு மிடத்தடி யான்புகழ் ஊரன்
உரைத்தஇம் மாலைகள் பத்தும்வல்லார்
கூடு மிடஞ்சிவ லோகன் இடங்கலிக்
கச்சி அனேகதங் காவதமே. 10

திருச்சிற்றம்பலம்